சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 12.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **2/2026** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-6 |
| சாட்சியின் பெயர் | : | சுந்தராஜ் |
| தந்தை பெயர் | : | கோவிந்தராஜ் |
| கிராமம் | : | எண்கன் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 50 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா-1 அன்புச்செல்வன்

என்பவரை எனக்கு தெரியும். கடந்த 02.11.2025 ஆம் தேதி இரவு 7.30 மணியளவில் முகந்தனூரில் ஆர்ச் அருகில் நான் இருந்தபோது அ.சா-1 அன்புச்செல்வன் அ.சா-4 வரதராஜன் கடை சாமான் வாங்கவதற்காக வந்தார். அப்போது எதிரியும் அங்கு வந்தார். அ.சா-1 யை பார்த்து பற தேவடியா மகனே உனக்கு என்ன அவசரம் என்று எதிரி அ.சா-1 யை பார்த்து பேசினார். அப்போது அ.சா-1 திரும்பி பார்த்தபோது எதிரி சோடா பாட்டிலை எடுத்து அ.சா-1 யை அடித்தார். அதில் அ.சா-1 கீழே விழுந்துவிட்டார். பின்னர் எதிரி கீழே கிடந்த விறகு கட்டையை எடுத்து எதிரி அ.சா-1 யை அடித்தார். பின்னர் நானும் அ.சா-4 வரதராஜன் என்பவரும் சமாதானம் செய்தோம். எதிரி அங்கிருந்து சென்றுவிட்டார். அதன் பின்னர் 108 ஆம்புலன்ஷ் மூலம் அ.சா-1 யை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அதன் பின்னர் மறுநாள் 03.11.2025 ஆம் தேதி மதியம் 12.45 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் என்னை விசாரித்தார்கள். வரைபடம் வரைந்தார்கள். அதில் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ-4 ஆன பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடைய கையொப்பம் தான். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: - இல்லை-**

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.12 18:45:10 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.